**OS.No.414/2021 P.W.1-திலகம் 23.02.2026**

<u>**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**</u>

பிரதிவாதி மாத ஏலச்சீட்டை நடத்தி வந்தார் என்றால் சரிதான். அந்த மாத ஏலச்சீட்டில் நானும் ஒரு புள்ளி என்றால் சரிதான். அந்த அடிப்படையில் எனக்கும், பிரதிவாதிக்கும் கொடுக்கல், வாங்கல் இருந்தது. அதன் அடிப்படையில் நான் 2017ம் ஆண்டில் ரூபாய் ஒரு லட்சத்தை மாதம் ஒன்றிற்கு ரூபாய் 4 சதவீதம் வட்டிக்கு பணம் கொடுத்தேன் என்றால் பணம் கொடுத்தது சரிதான், ஆனால் 4 சதவீத வட்டிக்கு கொடுக்கவில்லை. அவ்வாறு வாங்கிய பணத்திற்கு ஒழுங்காக பிரதிவாதி வட்டி செலுத்தி வந்தார் என்றும், அதன் அடிப்படையில் 2018ம் ஆண்டில் மேலும் ரூபாய் 2 லட்சத்தை மாதம் ஒன்றிற்கு 5 சதவீத வட்டிக்கு கடன் கொடுத்தேன் என்றால் நான் 2வது முறையாக ரூ.2,60,000/- கொடுத்தேன். வட்டி பேசவில்லை. மார்ச் 2019 வரை வட்டி தொகையை ரூ.14,000/- ஒழுங்காக எனக்கு செலுத்தி வந்தார் என்றால் இல்லை. ஏப்ரல் 2019க்கு பிறகு பிரதிவாதி வட்டி செலுத்தாததால் எனக்கும், பிரதிவாதிக்கும் இடையில் தகராறு ஏற்பட்டது என்றால் அவ்வாறு ஏற்படவில்லை. பிரதிவாதி மீது அடையாறு துணை ஆணையர் அவர்களிடம் 23.12.2019 அன்று ஒரு புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த புகாரானது நீலாங்கரை காவல் நிலைய ஆய்வாளருக்கு விசாரணைக்கு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். அந்த புகார் மனு மீது குற்ற எண்.82/2020-ல் பிரிவுகள் 406, 420-ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு பதிவு செய்யப்பட்ட அச்சு முதல் தகவல் அறிக்கையில் நான் பிரதிவாதிக்கு ரூபாய் 10 லட்சம் பணம் கொடுத்ததாக கூறியதன் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு பதிவு செய்யப்பட்ட வழக்கில் பிரதிவாதி எனக்கு கொடுத்த ஐசிஐசிஐ வங்கி காசோலை எண்.000422 நாள் 21.11.2019 தேதியிட்ட காசோலை திரும்ப வந்துவிட்டதால் அவர் மீது காசோலை மோசடி வழக்கு பதிவு செய்யவேண்டுமென்று கோரியுள்ளேன் என்றால் சரிதான். அச்சுமுதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட அன்று பிரதிவாதி கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டார் என்றால் சரிதான்.

(நேரமின்மையால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)